3. கவன ஈர்ப்பு.

திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடி ஊழியர்களை நிரந்தர மாக்குதல்.

திரு கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடியில் பணியாற்றுகின்ற 17 ஊழியர்களை ஆறு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியும், இதுவரை நிரந்தரம் செய்யப்படாமல் இருப் பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருப்பூர் கூட்டுறவு வளர்மதி சிறப்பங்காடியில் அவசரத் தேவையினைக் கருத்திற்கொண்டு 17 நபர்கள் பொட்டலம் கட் டும் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் அனைவரும 31—12—79 தேதிக்கு பிறகு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமின்றி நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்கள் இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து 480 நாட்களுக்கு மேலாக பணியாற்றியுள்ளதால் அவர்களது பணியை தமிழ்நாடு நிறுவன (ஊழியர்களுக்கு நிரந்தர தகுதியளிக்கும்) சட்டம் 1981—ன் பிர காரம் நிரந்தரமாக்கவேண்டும் என்று அரசுக்கு பதிவாளர் கருத் துரு அனுப்பியுள்ளார். தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு வராத பதவிகளுக்கு 31—12—79 தேதிக்கு முன்பு வேலைவாய்ப்பு அலுவலக மூலமின்றி நியமிக்கப்பட்ட நபர்களின் பணியை சிறப் பினமாகக் கருதி நிரந்தரம் செய்யலாம் என்றும், மேற்படி தேதிக்குப் பின்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமின்றி நிய மிக்கப்பட்ட நபர்களை உடனே பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் அரசு ஆணை நிலை எண். 126, வேலைவாய்ப்புத் துறை, நாள் 1—3—84—ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி 17 நபர்களை முறைகேடாக நியமனம் செய்யப்பட்டதால் அவர் களுக்கு தமிழ்நாடு தொழில் நிறுவன ஊழியர்களுக்கு நிரந்தரத் தகுதியளிக்கும் 1981ம் வருடச் சட்டம் பொருந்தாது என்றும் அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கூறியுள்ளார். மேற் படி நபர்கள் 31—12—79 தேதிக்குப் பின்பு வேலைவாய்ப்பு அலு வலகம் மூலமின்றி நியமனம் செய்யப்பட்டதினால் மேற்படி அர சாணையின்படி அவர்களை பணி நீக்கம் செய்து, காலியிடங் களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்ப வேண்டும் என்று வேலைவாய்ப்புத் துறை கூறியுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 4

மேற்படி 17 நபர்களின் பணியை நிரந்தரம் செய்வதில் சட்ட நுணுக்கப் பிரச்சினைகள் இருப்பதால், அவைகளை வேலை வாய்ப்புத் துறை மற்றும் சட்டத்]துறையுடன் கலந்து முடிவு எடுக்கப்படும்.

திரு கே. சுப்பராயன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டிருக்கிற 17 தொழிலாளர்களும் 6 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்கள் என்ற அடிப்படையில் கருணை உள்ளத்தோடு, மனிதாபிமான அடிப்படையிலும் சட்ட விதிகளை நடைமுறையில் தளர்த்தி அந்த 17 தொழிலாளர்களையும் நிரந்தரமாக்குவதற்குரிய இலாக்கா பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, 17 நபர்களின் பணியை நிரந்தரம் செய்வதில் சட்டப் பிரச்சினை, விதிமுறைகள் இப்போது இடம் தரவில்லை. ஆனால், அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, 6, 7 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்து இருக்கிறார்கள் என்ற நிலையிலும், அவர்களுக்கு வேறு வித தகுதிகளும் இருக்கின்றன என்ற நிலையிலும் அவர்கள் வேலைவாய்ப்பகத்தைக் கலந்து கொள்ளாமல் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தையொட்டி வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற சூழ்நிலையில், அந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று அந்தக் கூட்டுறவு அமைப்பிலிருந்து செயற்குறிப்பு வருமேயானால், அதுபற்றி அரசு கவனிக்கலாம், அங்கிருந்து அது வரவேண்டும். வந்தால், அது பற்றி அரசு கவனிக்கும்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டதற்கும், 7 ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றியதிலேயும், தனிப்பட்ட முறையில் இன்றைக்கு பாதிக்கப்படுகிற அந்த 17 தொழிலாளர்கள் எந்த வகையிலும் அதற்குக் காரணமாக அமைவதில்லை. அவர்களுக்கு சட்ட விதியைப் பற்றியோ, மற்ற விஷயங்களைப் பற்றியோ, தெரிந்து கொள்வதற்குரிய வாய்ப்பற்ற நிலையில் வேலை வாய்ப்பகத்தின் மூலம் அல்லாது அவர்கள் பணியில் சேர்க்கப்பட்டிருக்கிற இன்றைய நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டுவிடுவார்களேயானால், வேறுவேலைவாய்ப்புஅவர்கள் இனி மேல் தேடிக் கொள்வதற்கான வாய்ப்பே கிடையாது. எனவே, அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் நிரந்தரம் ஆக்குவதற்கிடையில் நிறுத்தப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை அரசு தர வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்வதோடு, கீழ் மட்டத்திலிருந்து வருகின்ற அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், குறுகிய கால வரம்பிற்குள் அவர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகளை பரிவுணர்ச்சியோடு கேட்டுப் பெற்று மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, உறுதி மொழி தருவதற்கில்லை. ஆனால், அங்கிருந்து அவர்கள் விண்ணப்பம் செய்வதன் மூலம் கீழ் நிலையிலிருந்து பரிந்துரை செய்யலாம். பரிந்துரையை அரசு கவனித்து கருணையுள்ளத்தோடு வேண்டுமானால் விதியைத் தளர்த்த வேண்டும். சில வகைகளில், சில நேரங்களில், இருக்கிற சூழ்நிலையையொட்டி, அவைகளின் தன்மையையொட்டி, இந்த ஒரு விதியை மட்டும் தான் தளர்த்த வேண்டியது அவசியம் என்று ஏற்படுகிறபோது, கருணையினுடைய அடிப்படையில் தளர்த்தலாம். ஆனால் அது பற்றி அரசு பரிசீலிக்கும். அங்கிருந்து வரவேண்டும். அல்லது இந்த 17 பேர்களும் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தினுடைய அடிப்படையில் ஆராயச் சொல்லி, அங்கிருந்து வர வேண்டும்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. *சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில், ஆளுநர் உரையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சிக்காக, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைக்கு முதலிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடுமையான வெள்ளச் சோதனையும், வறட்சிப் பெருக்கால் ஏற்படுகின்ற சோதனையும் மாறி மாறி, வந்தாலும், அந்தச் சோதனைகளையே சாதனைகளாக மாற்றி, மக்களைக் காப்பாற்றுவதில் புரட்சித் தலைவர் அரசு ஒரு மக்களாட்சி அரசு என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அது எந்தச் சோதனையாக இருந்தாலும், அந்தச் சோதனைகளை சாதனைகளாக்கி மக்களது நம்பிக்கையைப் பெற்று இன்றைக்கு இந்த அரசு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

கள்-சாராயக் கடைகளை மூட வேண்டும் என்று முதலிலே சொன்னார்கள், தமிழகத்தினுடைய நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமான, ஆழ்ந்த பிடிப்பு கொண்டவர் என்பதை நாம் கடந்த காலத்தில் அறிய முடியும்.

குடித்தால் ஆறு மாதம் தண்டனை என்று சட்டம் கொண்டு வந்து, நாட்டில் யாருமே மது அருந்தக்கூடாது என்ற கொள்கைக்கு வலிவு சேர்த்தார்கள். ஆனால், அப்போது சொன்னார்கள், 'என்ன மிகப் பெரிய பாவம் இது? குடித்தால் தண்டனையா,